கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை கொடும் குற்றவாளி ராஜபக்சேவை போர் குற்றவாளி என அறிவிக்கக்கோரி தி.மு.க. சார்பில் பூண்டி ஒன்றியத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில். அ.தி.மு.க. அரசால் பொய் வழக்குப் பதியப்பட்டு வழக்கு நடைபெற்று வந்தது. நிலையில் 29-11-2024 நேற்று வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் மாவட்ட நீதிபதி விடுதலை செய்தார். இந்நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.விடம் பொய் வழக்குப் போட்டு விடுதலை செய்யப்பட்ட பொதுக்குழு உறுப்பினர் பா. சிட்டி பாபு. ஒன்றிய அவை தலைவர் கே.பாஸ்கர். இரா.பாலு எம்.அகிலன் ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா.மோதிலால். மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் வி.எஸ்.சதீஷ், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் லிங்கேஷ்குமார் உள்ளனர்,

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1க்கு உட்பட்ட பம்மல்,நாகல்கேணி அம்மா உணவகத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர்,காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர்,பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி ஆகியோர் கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேவையான அளவு உணவுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இருக்கிறதா என்பதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். உடன் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் சத்தியசீலன், அம்மா உணவக பணியாளர்கள் இருந்தனர்.

‘பத்திரிக்கையாளர் நல வாரியத்தில்’ – 3300 பேர் பத்திரிக்கையாளர்களாக இணைந்துள்ளனர்!

2431 பத்திரிக்கையாளர்களுக்கு அங்கீகார அடையாள அட்டைகள்!

தமிழ் வளர்ச்சி – செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிக்கை!

சென்னை, நவ.30- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் அமைக்கப்பட்ட பத்திரிக்கையாளர் நலவாரியத்தில் 3300 பத்திரிக்கையாளர்களாக இணைந்துள்ளனர். 2431 பத்திரிக்கையாளர்களுக்கு அங்கீகார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

மக்களாட்சியின் பாதுகாவலர்களான பத்திரிக்கையாளர்களின் நலனைக் காப்பதில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற நாள் முதல் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அ.தி.மு.க. அரசின் பத்தாண்டுகால ஆட்சியில் பத்திரிகைத் துறையினர் மீது போடப்பட்ட பல்வேறு அவதூறு வழக்குகளை ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே ரத்து செய்ய உத்தரவிட்டு கருத்துரிமையைக் காத்து நின்றார் முதலமைச்சர்.

பத்திரிக்கையாளர்களின் நலனைக் காக்கும் பொருட்டு இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ‘பத்திரிக்கையாளர் நலவாரியம்’ உருவாக்கப்பட்டது. இந்த நலவாரியத்தில் 3300 பேர் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். நலவாரிய உறுப்பினர்களுக்கு கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட 21 வகையான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகின்றது.

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பத்திரிக்கையாளர்களின் முக்கிய கோரிக்கையாக இருந்த செய்தியாளர் அங்கீகார அடையாள

அட்டை (Accreditation Card) வழங்கப்படாமலும், அதற்கான குழுவும் அமைக்கப்படாமலும் இருந்தது; இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அதற்கான குழு அமைக்கப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது வரை தமிழ்நாடு முழுவதும் 2431 செய்தியாளர் அங்கீகார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 446 செய்தியாளர்களுக்கு சுகாதார அடையாள அட்டைகள் (Health Card) வழங்கப்பட்டுள்ளன.

பத்திரிக்கையாளர் நல வாரியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செய்தியாளர்களுக்கு ஓய்வூதியம், மறைந்த செய்தியாளர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி போன்ற பத்திரிக்கையாளர்களின் நலன்காக்கும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

“நான் முதலில் பத்திரிக்கையாளன்; பிறகுதான் அரசியல்வாதி” என்பார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர் காட்டிய வழியில் செயல்படும் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசு பத்திரிக்கையாளர்களின் கருத்து சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் உறுதியாகவும் அவர்களின் நலன்களை காப்பதில் மிகுந்த அக்கறையுடனும் செயலாற்றி வருகின்றது.

இவ்வாறு அவ்வறிக்கையில் மு.பெ.சாமிநாதன் குறிப்பிட்டுள்ளார்.

இரா.கிரிராஜன் எம்.பி. தலைமை ! ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு சார்பில் விழியிழந்தோர் இல்லத்தில் நல உதவிகள்!

ஆர்.எஸ்.பாரதி வழங்குகிறார் !

சென்னை நவ.30: கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி திமுக சட்டத்திட்ட திருத்தக்குழு சார்பில் தண்டையார்பேட்டை இரட்டைக் குழி தெருவில் உள்ள விழியிழந்தோர் இல்லத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நாளை (01.12.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சட்டதிட்ட திருத்தக்குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, தலைமை வகிக்கிறார். இணைச்செயலாளர் சுபா. சந்திரசேகர் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், 42வது வட்ட செயலாளர் ப.குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி, பங்கேற்று விழியிழந்தோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

சட்டத்துறை தலைவர் இரா.விடுதலை, தலைமை கழக சட்ட ஆலோசகர் பி. வில்சன் எம்.பி, சட்ட திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் வேலூர் வி.ஞானசேகரன், சட்டத்துறை துணை செயலாளர் என்.மருது கணேஷ், சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.கல்யாணசுந்தரம், தென்றல் செல்வராஜ் , கோவை இரா.மோகன், சுபா.சீதாராமன், ஒரத்தநாடு பி. ராஜமாணிக்கம், வழக்கறிஞர் மேலூர் கரு.தியாகராஜன், திருப்பூர் சுப்பையன், தஞ்சை சி.இறைவன், போலீஸ் வெ.கண்ணன், சுப.த.சம்பத், ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இரா.நக்கீரன் நன்றி கூறுகிறார்.

திருவல்லிக்கேணி காமகலா காமேஸ்வரர்

திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.7.5 கோடி மதிப்பிலான காலி மனை மீட்பு!

சென்னை, நவ.30 முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று (28.11.2024) சென்னை, திருவல்லிக்கேணி காமகலா காமேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமானது என மான்பமை உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து, சென்னை மண்டலம்2 இணை ஆணையர் அவர்களின் அறிவுரைகளின்படி, உதவி ஆணையர் கி.பாரதிராஜா அவர்கள் முன்னிலையில், காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் ஆகியோரின் உதவியுடன் காலி மனை மீட்கப்பட்டு, திருக்கோயில் வசம் கலா காமேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமானது என மான்பமை உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து, சென்னை மண்டலம்2 இணை ஆணையர் அவர்களின் அறிவுரைகளின்படி, உதவி ஆணையர் கி.பாரதிராஜா அவர்கள் முன்னிலையில், காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் ஆகியோரின் உதவியுடன் காலி மனை மீட்கப்பட்டு, திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு சுமார் ரூ. 7.5 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது மயிலாப்பூர் சரக ஆய்வர் மணி, சிறப்பு பணி செயல் அலுவலர்கள் குமரேசன், திருமதி தேன்மொழி, ரமேஷ், நித்யானந்தம், கோபி மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர் திருமதி கங்காதேவி ஆகியோர் உடனிருந்தனர்.

மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

24 மணி நேரமும் என்னை அழைக்கலாம்!

பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. அறிக்கை!

பல்லாவரம். நவ.30 பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம்2 அலுவலக வளாகத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இதில் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி மண்டலங்களை சேர்ந்த மாநகராட்சி அதிகாரிகள், மின்வாரியம், நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி பேசுகையில் :-

மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநகராட்சி அதிகாரிகள் பள்ளிகள் மற்றும் திருமண மண்டபங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மேலும் அங்கு ஜெனரேட்டர் வசதி ஏற்பாடு செய்திட வேண்டும்.

மழை அதிகமடைந்து பள்ளி மற்றும் மண்டபங்களில் தங்க வைப்பவர்களுக்கு உடனடியாக பாய், பெட்ஷீட், பிஸ்கட், பிரட், குடிநீர் போன்ற அத்தியாவசிய தேவையான பொருட்களை வழங்க வேண்டும்.

அதுமட்டுமின்றி அவர்களுக்கு மூன்று வேலையும் தேவையான உணவுகளை தயார் செய்து வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

உணவு எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

தொற்று நோய்கள் பரவாமல் இருக்க மாநகராட்சி சுகாதார நிலையங்கள் மூலம் மருத்துவ முகாம்களை அமைக்க தயார் நிலையில் இருக்க வேண்டும்.

அனைத்து அதிகாரிகளும் மழையை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்க வேண்டும்.

அதுமட்டுமின்றி மீட்பு பணிகள், பொது மக்களின் தேவைகள், உதவிகள் என எதுவாக இருந்தாலும் 24 மணி நேரமும் எனது செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு அழைக்கலாம் என பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தெரிவித்தார்.

கூட்டத்தில், மாநகராட்சி உதவி ஆணையர், உதவி செயற்பொறியாளர், சுகாதார அலுவலர், வருவாய் அலுவலர், உதவி பொறியாளர்கள், மின்வாரியத் துறை பொறியாளர்கள், நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டு மீட்பு பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் தயார் நிலையில் இருப்பதாக உறுதியளித்தனர்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்!

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் ரத்ததான முகாம்!

மாத்தூர் கா.தாமரைச்செல்வன் தலைமையில் - ஆர். பாபு பங்கேற்பு!

மாதவரம், நவ.30- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் ரத்ததான முகாம் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி 19வது வட்டம் மாத்தூர் பிரவீன் மஹால் திருமண மண்டபத்தில் வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த ரத்ததான முகாமில், இளைஞர்களும் மாணவர்களும் திரளாக கலந்து கொண்டு ரத்த தானம் செய்தார்கள்.

இரத்த தானம் செய்து இளைஞர்களுக்கு சான்றிதழ்களை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கி வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி பி. நிர்மல் குமார், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், பி. துரைசாமி, பேன்சி ரமேஷ், ஜெயராஜ், சின்ன மாத்தூர் மணிகண்டன், துரை தசரதன், வட்ட நிர்வாகிகள் சரவணன், திருமலை, துளசி, கோவர்த்தனன், ஹரி சுப்பிரமணி, கதிரவன், விஜய் ஆனந்த், குமார், நந்தகுமார்,சின்ன மாத்தூர் குகன், நாகராஜ், காசி, குமார், ஐசி எப் சிவப்பிரகாசம், சோமு, தமிழரசன், கங்காதரன், ராஜேஷ் கண்ணன், சுரேஷ், ஜானகிராமன், சாந்தகுமார், முகமது முஸ்தபா, மலர்மன்னன், கஸ்தூரி, சரஸ்வதி பெரியநாயகி, கலைச்செல்வி, அத்திக்குளம் தேவி சுந்தரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாரா யணன் செய்திருந்தார்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகர தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி 2000 நபர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள், இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார்கள். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், பேச்சாளர் எம்.ரோஜா, நிவேதா ஜெசிகா, காயத்திரி ஸ்ரீதர், பா. நரேஷ்குமார், காஞ்சனா சுதாகர், ஏ.ஜெ.பவுல், எஸ்.சங்கர், ஏ.டி.பிரியாகுமார், சா.பென்ஜாமின், வே. குமாரசாமி, நடராஜன், பானுஅரசு, ஜெ.சரவணன், செல்லதுரை, ஜோதிநாதன், பாண்டுரங்கன், எம். காந்தி இளங்கோவன், சத்தியகிரி, கெஜா, பரிசமுத்து, பொன்.மனோகரன், துரைகோபால், தெய்வசிகாமணி, ம.விநாயகம், குமார், ஐ.ஜாக்கப், கே.பி.எஸ்.சுதாகர், பிரதானம், ரங்கதுரை, பி.வி. கே.கண்ணன், பா.பன்னீர்செல்வம், க.சாது, பி.உமாபதி, என்.பி.ஜெகன், நூம்பல் ஆசை தம்பி, இளையராஜா, அரசன், பாபு, பேபிஸ்ரீ, என்.ராஜி, ஆ.நாராயணன், அப்பு, எம்.சுரேஷ், பா. சாந்தகுமார், பா.விஜயகுமார், பி.ஜி.எம்.விநாயகம், ராஜ்குமார், அமலேஸ்வரி ராஜேஷ், நரேஷ், கணேஷ், வி.பிரபு, உள்பட பலர் உள்ளனர்.

என்.மருதுகணேஷ் தலைமை!

டி.போஸ் கே.பொம்முராஜ் தா.சிவராமன் முன்னிலை !

ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் துணை முதல்வர் பிறந்தநாள்!

சென்னை நவ.30: கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி, ஆலோசனைப்படி ஜார்ஜ் டவுன் நீதிமன்ற நுழைவாயில் அருகே சட்டத்துறை மாநில துணைச் செயலாளர் என்.மருதுகணேஷ் தலைமையில் வழக்கறிஞர்கள் டி.போஸ், கே.பொம்முராஜ், மாவட்ட அமைப்பாளர் தா. சிவராமன் ஆகியோர் முன்னிலையில் கேக் வெட்டி இனிப்பு வழங்கி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் வழக்கறிஞரணி மாவட்ட நிர்வாகிகள் டி. மதன்ராஜ், எஸ்.சரவணகுமார், சி.சேனாதிபதி, ஆர்.ராஜன், சி.பாலமுருகன், எஸ்.சசிதரன், ஜெய்சங்கர், ஏ.கே.உமாசங்கர், சி.ஸ்ரீதர், எம்.பாக்கியராஜ், டி. சீனிவாசன், டி.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஜெயா வினோ சிரீதர், மா.ரூபசங்கர், வி.கார்த்திக், எஸ்.ராஜேஷ், ஜி.டில்லி பாபு, எஸ்.மோகனசுந்தரம், ஜே.ராஜேந்திரன், கே. காளிதாஸ் , ஏ.வெங்கடேஷ்குமார், ஏ.அசோக்குமார்,

என்.யுகநாதன், டி.ஜெயசேகர், எம்.ரமேஷ், ஆர்.வேலுச்சாமி, ஏ.சாந்தகுமார், ராயபுரம் கோகுல், ராயபுரம் நாகராஜ், ராயபுரம் பிரபா, எச்.கருணாகரன், டி.சக்திவேல், எம்.நாகராஜ், என்.வெங்கடஷ்வரன், சுகன்யா சீனிவாசன், கே. தாமோதரன், ஜி.கோவிந்தசாமி, ஜெ.கிளமன்ஸ், ஆர். மகேஸ்வரன், இ.தினேஷ், ஆர். சத்யா, எஸ்.முருகன், எஸ். மோகன்சாய், எச்.சாய்நாத், எஸ்.ராஜி, எஸ்.எஸ்தர், வி. மோகன், எல்.கோகுல், ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் ரத்ததான முகாம் 19வது வட்டம் மாத்தூர் பிரவீன் மஹால் திருமண மண்டபத்தில் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்றது. வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் இளைஞர்களும், மாணவர்களும் ஆர்வமாக கலந்து கொண்டு இரத்த தானம் செய்தார்கள். மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, பி.நிர்மல் குமார், சின்ன மாத்தூர் மணிகண்டன், எஸ். உதயகுமார், விஜய் ஆனந்த், குமார், நந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.